**வலிகாமம் தெற்கு பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும்

ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | கூட்டுமொத்தம் ரூபா 1,962,293 பெறுமதியான மூலதன வடிவத்திலான 04 கட்டட வேலைகள் மற்றும் புனரமைப்பு வேலைகள் நிலையான சொத்தாகக் கணக்கிடுவதற்கு பதிலாக மீண்டெழும் செலவினமாக கருதி கணக்கிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்தாகக் காட்டப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | தண்டப்பணமாக அறவிடப்பட்ட ரூபா 1,327,589 ஆனது வருமானமாக காட்டப்பட்டிருக்க வேண்டிய போதும் நானாவித வைப்பில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | உலக வங்கி குழுவினது இறுதி முடிவுக்காக இவ் வேலைக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,170,046 ஆன 10 காணிகட்டடங்கள் காட்டப்பட்டிருந்த போதிலும் குறித்த காணிகட்டடங்கள் சபைக்குரித்தானவை | ஆவணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை | சபைக்கு உரித்தான சொத்துக்களின் |

| | | |
|---|---|---|
| என்பதனை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படும். | உரிமைத்துவம் தீர்க்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 129,417,066 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 133,517,598 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 15,460,000 | 13,682,074 | 17,696,474 | 27,285,226 | 14,811,000 | 14,761,276 | 12,330,097 | 28,868,446 |
| வாடகை | 56,801,600 | 53,317,529 | 53,125,383 | 911,951 | 56,622,800 | 57,047,485 | 40,764,826 | 1,663,012 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 2,945,000 | 3,307,303 | 3,307,303 | - | 2,875,000 | 2,814,083 | 2,841,583 | - |
| ஏனைய வருமானம் | 45,387,000 | 96,305,940 | 96,305,940 | 14,717,742 | 53,568,000 | 82,101,384 | 77,887,425 | 37,013,233 |
| | **120,593,600** | **166,612,846** | **170,435,100** | **42,914,919** | **127,876,800** | **156,724,228** | **133,823,931** | **67,544,691** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| இரண்டு முதல் 05 வருடங்களிற்கு மேலாக நிலுவையாக காணப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 27,285,226 ஆன ஆதனவரி நிலுவை மற்றும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட குத்தகை நிலுவை ரூபா 6,370,313 அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், 10 வருடங்களிற்கு மேற்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 7,951,852 ஆன மீதியொன்றும் காணப்பட்டது. | ஆதனவரி அறவிடுவதற்கு 2023 தை மாதம் நடமாடும் சேவை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வாடகை நிலுவை மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிலுவை வருமானங்களை துரிதமாக சேகரிக்கப்படுதல் வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| 02 வருடங்களிற்கு முன்னர் குப்பைகளினை அகற்றுவதற்காக வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 600,000 ஆனது நாளதுவரை அறவிடப்படாமலுள்ளது. | விசாரணை தீர்ப்பு கிடைக்கப்பெறும் பட்சத்தில் கணக்கிலிருந்து சீர்செய்யப்படும். | குறித்த முற்பணம் துரிதமாக அறவிடப்படுதல் வேண்டும். |

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையின் ஏழாலை உப அலுவலக அதிகாரத்திற்குட்பட்ட இடங்களிலுள்ள கூட்டுமொத்தம் 8,385 குடியிருப்பு ஆதனங்களின் ஆண்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் அவற்றின் மீது சபைக்குக் கிடைக்கவேண்டிய வீதவரிகள் கணிப்பிடப்பட்டு அறவிடப்பட முடியாதிருந்தது. | அந்த ஆதனங்களின் பெறுமதிகள் மீள்மதிப்பீடு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றதும் ஆதனவரி அறவீடு மேற்கொள்ளப்படும். | சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் விடப்படக்கூடாது. |
| (ஆ) | சபையின் 02 கடைகளானது மீளாய்வாண்டில் கேள்விகோரி விளைவற்று காணப்படுவதனால் வருடாந்தம் ரூபா 536,020 ஆன வருமான இழப்பொன்று ஏற்பட்டிருந்தது. | அவை கேள்வி கோரப்பட்டும் எவரும் விண்ணப்பிக்காமையினால் குத்தகைக்கு வழங்கப்படவில்லை. இனிவரும் காலங்களில் இரு கடைகளும் வேறு கடைகளாக மாற்றி குத்தகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் விடப்படக்கூடாது. |
| (இ) | சபைக்கு சொந்தமான 02 வாகனங்களின் பெறுமதியானது மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பிடப்பட்டவுடன் நிதிக்கூற்றுக்களின் நிலையான சொத்தாக வெளிப்படுத்தப்படும். | வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையின் 06 மயானங்கள் அமைந்துள்ள காணிகளினை சபைக்கு உரித்தாக்குவதற்கும் அவற்றின் பெறுமதிகளை | அனுமதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு | சொத்துக்களின் உரிமைத்துவம் தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களாகக் காட்டப்பட்டிருப்பதற்கும் நாளாதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருகின்றது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான 03 காணிகளின் பெறுமதிகள் மீள்மதிப்பீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பிடப்பட்டதும் 2023 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | காணிகளின் மீள்மதிப்பீட்டினை மேற்கொள்வது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |